Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி மார்கழி 7 ஆம் நாள் ஷஃபான் பிறை 16 21-12-64 திங்கட்கிழமை இதழ் 312




# வடபகுதியில் வரட்சி; விவசாயிகள் கவலை

## மழைக்காக ஆலயங்களில் பிரார்த்தனையும் அபிஷேகமும்

யாழ்ப்பாணம், திங்கள்

**வடமாகாணத்தில் இவ்வருடம் போதிய மழை பொழியாததால் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாதம் மழை பெய்யும் என எதிர்பார்த்து நெற்செய்கையில் அதிக பணத்தை செலவிட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் வடபகுதியில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன.**

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று நண்பகல் முதல்வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்த போதிலும் மழைபெய்யவில்லை. இடையிடையே சில நிமிடங்கள் மழைத்தூறல் விழுந்தது. நேற்றுமாலைவரைவானத்தில் மப்பு இருந்தபோதிலும் மழைபொழியவில்லை.

கிளிநொச்சி, கண்டாவளை, பரந்தன், குஞ்சுப்பரந்தன், உருத்திரபுரம், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஏழை விவசாயிகள் மழை பொழியாததால் கலக்கமடைந்துள்ளனர்.

30 அடி ஆழமுள்ள இரணைமடுக் குளத்தில் தற்பொழுது 3 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. கிளிநொச்சி பகுதி எங்கும் ஒரே வரட்சியாகக்காணப்படுகிறது. கடந்த வருடம் இதேமாதத்தில் இரணைமடுக் குளத்தில் நீர் நிறைந்து பாய்ந்தது.

**'கொடும்பாவி' இழுக்க ஏற்பாடு**

இன்னும் ஒருமாத காலத்திற்கு மழை பொழியாவிடில் இரணைமடுக் குளத்தில் தண்ணீர் முற்றாக வற்றிவிடும் என விவசாயிகள் அஞ்சுகின்றனர். இப்பகுதிகளில் மழையைப் பொழியச் செய்வதற்கு ஏழை விவசாயிகள் கொடும்பாவை கட்டி இழுக்க முயற்சிகள் செய்து வருவதாகவும் கோயில்களில் பூஜைகள் அபிஷேகங்கள் செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. வருண பகவானை வேண்டி பிரார்த்தனைக் கோஷ்டியொன்று இவ்வார இறுதியில் இரணைமடுவிலிருந்து பஜனைகோஷ்டி ஆரம்பித்து பனையை வந்தடையுமென்று கூறப்படுகிறது.

**குடிநீருக்கே தட்டுப்பாடு**

விளைச்சலை நம்பி, கடன் வாங்கியும் நகைகளை அடைவு வைத்தும் நெற்பயிர் செய்த ஏழைகள் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர். கிளிநொச்சிப்பகுதிகளில் உள்ள கிணறுகளிலும் நீர் குறைந்து வருகிறது. குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் இப்பகுதி மக்கள் மனதில் குடி கொண்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளும் மழை பொழியாததால் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர். உசன், மறவன்புலோ, தச்சன் தோப்பு, கல்வயல் ஆகிய இடங்களில் வரட்சி காணப்படுகிறது.

பூநகரிப்பகுதியில் கடந்தவருடம் பெய்த பெரும்மழையினால் அதிக விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கடந்தவருடம் இப்பகுதிகளில் சிலரது பயிர்கள் முற்றாக நாசமடைந்தது. ஆனால் இவ்வருடம் பூநகரிப் பகுதியில் மழை பொழியாத காரணத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் கலவரமடைந்துள்ளனர். (5-ம்பக்கம்பார்க்க)

## முன்னாள் பாக். மந்திரி கைது

கராச்சி, டிச. 20

கிழக்கு பாகிஸ்தானில் நேற்று ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன், முன்னாள் மந்திரி ஒருவர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் அயூப்கானும், மிஸ் பாதிமா ஜின்னாவும் பேசிய தேர்தல் மன்றக் கூட்டத்துக்கு வெளியே இருவரின் ஆதரவாளர்களும் கைகலப்பு நடாத்தினர். கற்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

## சீனாவுடன் தொடர்ந்து உறவு

பீகிங், டிச. 20

சீனாவுடனுள்ள உறவை தமது நாடு ரத்துச் செய்யாது என இப்போ விஜயம் செய்திருக்கும் ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதுகோஷ்டித் தலைவர் கூறினார்;

அல்ஜீயர்ஸில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இரண்டாவது ஆசிய-ஆபிரிக்க மகாநாடு வெற்றிபெற சீனாவுடன் தனது நாடு ஒத்துழைக்கும் என்றும் அவர் கூறினார்.

## சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு

### இ. தொ. காங்கிரஸ் தீர்மானம்

நுவரெலியா, ஞாயிறு

இலங்கையிலுள்ள இந்திய வம்சா வழியினர் சம்பந்தமாக இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் இந்தியப்பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியும் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் விசேஷ மகாநாடு இன்று முடிவுசெய்தது.

நுவரெலியாவில் இன்று நடைபெற்ற இந்த மகாநாட்டில் காங்கிரஸ டெலிகேட்டு (6-ம் பக்கம் பார்க்க)

## இரண்டு தட்டு பஸ்ஸுக்கு தீ வைக்க முயற்சி?

### பொலிசார் தக்க தருணத்தில் செயலாற்றி சேதத்தை தடுத்தனர்

### விசாரணை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றிரவு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீ தொடரிலக்க இரண்டு தட்டு பஸ்ஸில் சம்பவம் ஒன்று நடைபெற்றது. பஸ்ஸில் தீப்பிடித்து பஸ்ஸுக்கு சேதம் எதுவும் ஏற்படாவண்ணம் நிலையத்தில் கடமைபுரிந்த பொலிசார் தக்க தருணத்தில் செயலாற்றினர்.

பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த சிங்கள 'ஸ்ரீ' தொடர் இலக்க பஸ்ஸில் சிறு புகை மண்டலம் ஒன்று தென்பட்டு, பின்னர் தீப்பிடித்தும் தெரிந்தது. இதனைக்கண்ட பொலிசார் உடனே தீ அணைப்பு யந்திரத்தைக்கொண்டு அதனை (6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் இல்லங்களை
வாசனையால் பரிமளிக்கச் செய்யுங்கள்

நறுமணம் கமழும் மனோரம்மியமான
"ராதா"

★ ஜெகன் மோகன் ஜவ்வாது வத்தி
★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி
★ பத்மினி ஜவ்வாது வத்தி
★ ஸ்பெசல் அம்பர் வத்தி
★ இந்திராணி வத்திகள்

இந்தியா வத்தி போன்ற
அதிஉன்னத தயாரிப்புகள்.

இன்றே கேட்டு வாங்குங்கள்.

எல்லா வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541

"பாலேந்திரா பீல்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

## தமிழரசுக்கட்சி மலைநாட்டில் அபேட்சகர்களை நிறுத்தாது

### அபேட்சகர் பட்டியல் இன்றுவெளியாகும்

கொழும்பு, ஞாயிறு

**மலைநாட்டைச் சேர்ந்த தொகுதிகளில் தனது கட்சி அபேட்சகர்களை நிறுத்துவதில்லையென தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது.**

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மலைநாட்டுத் தொகுதிகளில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களை நிறுத்தும் உத்தேசம் இல்லையென தமிழரசுக்கட்சியின் காரியக் கமிட்டி முடிவுசெய்துள்ளதாக அறியப்படுகிறது.

மலைநாட்டுத் தொகுதிகளில் உள்ள தமிழர்கள் எந்தக் கட்சியை ஆதரிக்கவேண்டுமென தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை விரைவில் கட்சி வெளியிடும்.

எதிர்வரும் தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களை தெரிவுசெய்யுமுகமாக (6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

அற்ப சம்பவங்கள் போல் தோன்றுபவை சிலசமயம் ஒருவரது வாழ்க்கையையே மாற்றக் கூடியதாகவுமாகிவிடலாம்.

— பால் பிரண்டன்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 7உ (21-12-64)

## இந்தியா–இலங்கை நல்லுறவு

டில்லி ஒப்பந்தத்துக்கு இரு பெரிய கண்டங்கள் ஏற்பட்டன. ஒன்று பிரதமர் ஸ்ரீமாவின் அரசாங்கம் தோற்று பார்லிமெண்டும் கலைக்கப்பட்டது. மற்றொன்று இலங்கையிலே இந்திய வம்சாவளியினரான பதிவுப் பிரஜைகளை எல்லாம் தனித் தொகுதிக்கு ஒதுக்குவதென்ற யோசனைக்கு இந்திய அரசாங்கம் மட்டுமன்றி இலங்கையிலுள்ள சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதி ஸ்தாபனங்களும் பலமாக ஆட்சேபித்துள்ளன.

முதல் கண்டத்துக்கு இந்த ஒப்பந்தம் பிழைத்துவிட்டது. இரு அரசாங்க அதிகாரிகளும் கொழும்பில் கூடி, ஒப்பந்தத்தை அமுல் செய்வதைப் பற்றி ஒற்றுமையான சில யோசனைகளுக்கு உடன்பட்டிருப்பதாக வெளிநாட்டு அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த ஒப்பந்தத்தைக் கூடிய சீக்கிரத்தில் அமுல் நடத்த இரு கோஷ்டிகளும் விருப்பம் தெரிவித்துள்ளதுடன் நல்லெண்ணத்துடன் ஒத்துழைத்து அதை நிறைவேற்றுவதென்றும் இதனால் இரு தேச நட்புறவும் பலப்பட்டு, எல்லாத் துறைகளிலும் அதிக ஒத்துழைப்பு ஏற்படலாமென்றும் அறிக்கை கூறுகிறது.

இதற்கு முதல்படியாக ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய (நாடற்ற)வர்களில் இலங்கை பிரஜையாக விரும்புபவர்களும் இந்திய பிரஜையாக விரும்புகிறவர்களும் தனித் தனியே மனுச்செய்ய வேண்டும். இதற்காக இருஇடாப்புகள் தயாரிக்கப்படுமாம். இரு இடாப்புகளிலுள்ள பெயர் விபரங்களை இரு அரசாங்கங்களும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதென்றும் தீர்மானித்துள்ளன.

இலங்கையிலுள்ள இந்த வம்சாவளியினரான 'நாடற்ற'வர்களில் எவ்வளவுபேர் இந்திய பிரஜைகளாக விரும்புவரென்பது திட்டமாகத் தெரியவில்லை. இதுபற்றி கருத்து வேற்றுமைகள் அதிகமுள்ளன. தனி இடாப்பு வைத்து மனுக்கள் கிடைத்த பின்தான் நிலைமை தெளிவாகும். இலங்கைப் பிரஜைகளானாலும், தனித்தொகுதியில் ஒதுக்கித் தங்களை இரண்டாந்தரமாக நடத்தப் போகிறார்கள் என்பதை உணர்ந்தால் அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக விரும்பாமல் போகக்கூடும்.

# மூன்று வாரங்களில் தேர்தல் திருவிழா கொடிஏற்றம்

## நியமனத்துக்கு அதிகபோட்டிகள்

### மலைநாட்டுத் தமிழ் வாக்காளர் ஆதரவு யாருக்கு?

— நமது அரசியல் நிருபர் —

அடுத்த பொதுத் தேர்தல் விழாவின் 'கொடியேற்றம்' இன்னும் சரியாக மூன்றே வாரங்கள்தான் உள்ளன. ஜனவரி 11-ம் திகதி நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டும்.

முன்னைவிட இப்போது அதிகமானவர்கள் தேர்தலில் போட்டியிட ஆவல்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. பல அரசியல்கட்சித் தலைவர்களும், தங்கள் கட்சி சார்பாக யாரை அபேட்சகராக நியமிப்பதென்று தீர்மானிக்கும் தர்மசங்கடமான வேலையில் இப்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே இருந்து வந்த பிரதிநிதிகளையே பல கட்சிகளும் அநேகமாக புதிய தேர்தலிலும் அபேட்சகராக நியமிக்குமென்று எதிர்பார்க்கலாம். ஒரு சில தொகுதிகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படக் கூடும். என்றாலும் வெற்றிபெறுவதே ஒவ்வொரு கட்சியின் முக்கிய நோக்கமதலால், தயவு தாட்சணியத்துக்கு அதிக இடமிருக்க முடியாது.

∴ ∴ ∴

சுயேட்சையாக நின்றுபோட்டியிடுபவர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகமிராதென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் சுயேச்சைவேட்பாளரைவிட, கட்சி சார்பில் போட்டியிடுபவருக்கு அதிக சலுகைகள் சட்டப்படி அளிக்கப்பட்டுள்ளன. கட்சிச் சார்பில் போட்டி பணம் ரூபா 250 செலுத்தினால் போதும். ஆனால் சுயேட்சை அபேட்சகர் ரூபா 1000 செலுத்தவேண்டும். தேர்தல் சின்னம், பிரசார வசதி முதலியன கட்சி அபேட்சகருக்கே அதிகமாகும். சென்றமுறை சுயேச்சையாக நின்று வென்றவர்கள் இம்முறையும் நிற்கலாம். மற்றப்படி கட்சிச் சார்பிலே நியமிக்கப்படாதவர்கள், சுயேட்சையாக நின்று வெல்லுவது அதிக கடினமாவதால் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர்கள் அதிகம் தயங்கக் கூடும்.

∴ ∴ ∴

தமிழ்ப் பகுதிகளில் மட்டுமன்றி, எல்லாப் பகுதிகளிலும் முன்னைவிட இம்முறைபோட்டி அதிக பலமாக இருக்கலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்கும் தான் பல தொகுதிகளிலும் நேர்முகமான போட்டி இருக்கலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் அதிகாரத்துக்கு வராமல் தடுக்க வேண்டுமென்று ஐ.தே கட்சியும் சி. பி.டி' சில்வாவின் புதிய கட்சியும் முனையும். இவை இரண்டும் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்றும் சொல்லப்படுகிறது. இது எவ்வளவு தூரம் சாத்தியமென்பது இனித்தான் தெரியவேண்டும்.

சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிக ஸ்தானங்கள் பெறமுடிந்தது மலைநாட்டில்தான்; மலைநாட்டிலே இந்திய வம்சாவளியினரின் வாக்குகள் குறைவே என்றாலும், இருகட்சிகளுக்கிடையே போட்டி சரிசமமாக இருக்கையில், அவர்களது வாக்குகளே வெற்றிதோல்வியை நிர்ணயிக்கக் கூடியவையாகும். ஆகவே மலைநாட்டிலே வாக்குரிமை பெற்ற தமிழரின் வாக்குகள், அடுத்தமுறை எந்த கட்சி அதிகாரத்துக்கு வருமென்பதை அநேகமாகத் தீர்மானிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதை ஸ்ரீமாவும் டட்லி முதலியவர்களும் நன்கறிவர். இந்த சுமார் 60 ஆயிரம் வாக்குகளும் தனித்தொகுதியில் இன்னும் ஒதுக்கப்படவில்லை. ஆகவே இம்மக்களின் ஆதரவைப்பெற இவ்விரு சாரிகளும் கூடுமான முயற்சிகளை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் செய்யக்கூடும்.

இவ்விரு கட்சிகளில் இம்மக்களுக்கு யார் உண்மையான நண்பர்கள்? இவர்கள் யாரை ஆதரிப்பது? மிகவும் கடினமான கேள்வி. சென்றமுறை இவர்களது ஆதரவு ஸ்ரீமாவுக்குத்தான் கிடைத்தது. அதனால் தொண்டமானுக்கு ஒரு நியமன ஸ்தானம் கிடைக்க முடிந்தது. இம்முறையும் தொண்டமான், அஸீஸ் இவர்களது ஆதரவைப்பெற ஸ்ரீமா முயற்சி செய்வதாயின் அதில் வியப்பில்லை.

∴ ∴ ∴

டில்லி ஒப்பந்தத்தை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டுவர, தொண்டமானும் அஸீஸும் இருதேச அதிகாரிகளுடனும் ஒத்துழைப்பாரென்றே தாம் நம்புவதாயும், அவர்களிடம் தாம் பேசியதாகவும், கொழும்புக்கு வந்திருந்த இந்திய காமன்வெல்த் இலாகா காரியதரிசி ஜா, சென்னையிலே பத்திரிகை நிருபர்களிடம் கூறியிருக்கின்றார். ஆதாரமில்லாமல் அவர் இந்த நம்பிக்கையைத் தெரிவித்திருக்க மாட்டார்.

மலைநாட்டில் எந்தத் தொகுதியிலும் இந்நிலையில் தொண்டமானோ, அஸீஸோ போட்டியிட்டு வெற்றிபெறுவது குதிரைக்கொம்பு. என்றாலும் அவர்களது செல்வாக்கு அதிகமாகும். இம்முறை அவர்களது ஆதரவு ஸ்ரீமாவுக்கா? டட்லிக்கா? அவர்களது ஆதரவைப்பெற திரு. டட்லி புதிதாக விசேஷ முயற்சி செய்வாரா?

தனித்தொகுதி யோசனையை இந்திய அரசாங்கம் மட்டுமன்றி இங்குள்ள இந்திய வம்சாவளியினரின் ஸ்தாபனங்கள் பலவும் ஆட்சேபித்துள்ளன. அப்படி இருந்தும் இந்த யோசனையை இலங்கை அரசாங்கம் கைவிடவில்லை. அடிப்படையான இந்த விஷயம் டில்லி ஒப்பந்தத்துக்கு உட்பட்டதேயன்றி புறம்பானதல்ல. அப்படி இருந்தும் அது பற்றி ஒரு திட்டமான முடிவு செய்யாமல், இந்த ஒப்பந்தத்தை நடத்திவைக்க இந்தியா ஒப்புக் கொள்ளப் போகிறதா? அல்லது இவ் விஷயமாகவும் ஏதாவது சமரசம் சாத்தியமா என்பது முக்கிய விஷயம்.

இருதேசங்களுக்கும் நீண்ட காலமாகவுள்ள சிக்கலான இந்தப்பிரச்னை சுமுகமாகத் தீரத்தான் வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட மக்களின் ஒத்துழைப்பும் சம்மதமும் இருந்தாலே ஒப்பந்தத்தை நடத்தவும் இருதேச நல்லுறவும் பலப்படவும் முடியும். நேர்முகமாகவோ மறைமுகமாக யாரையும் நிர்ப்பந்தம் செய்யாதவகையில் இரு தேசங்களும் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில்தான் இதன் உண்மை வெற்றியும் அடங்கி இருக்கும்.

## பிற மொழிகளில் சிங்கள நூல்கள்

கொழும்பு, ஞாயிறு

சிங்கள நூல்களும், சிறுகதைகளும், ஆங்கிலம், பிராஞ்சு, ஜேர்மன், ருஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்படவேண்டும் என பங்கொக்கில் நடைபெற்ற இரண்டாவது ஆசிய எழுத்தாளர் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை உட்பட பதின்மூன்று ஆசிய நாடுகள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டன.

## டெடிகமவில் யூ. என். பி.

டெடிகம, ஞாயிறு

டெடிகம கிராமசபை தேர்தலில் யூ. என். பி. பதினொரு வட்டாரங்களில் வெற்றிபெற்றுள்ளது.

பத்தொன்பது வட்டாரங்களைக்கொண்ட இக் கிராமசபையில் மிகுதி எட்டுவட்டாரங்களிலும் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

## காங்கிரஸ் கட்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முக்கிய கூட்டமொன்று இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக்காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களாக கடந்த தேர்தல்களில் போட்டியிட்டவர்களும் எதிர் வரும் தேர்தலில் கட்சி அபேட்சகர்களாக போட்டியிட விண்ணப்பஞ்செய்துள்ளவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்களென்று அறியப்படுகிறது.

உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு எம். சிவசிதம்பரம், வவனியா முன்னாள் எம். பி. திரு. ரீ. சிவசிதம்பரம், கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. சிவசுந்தரம் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என அறியப்படுகிறது.

திரு ஜி ஜி. பொன்னம்பலம் நாளை காலை 8 மணிக்கு விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைவாரென தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசி திரு ரீ. சங்கரப்பிள்ளை நேற்றிரவு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பலாலி விமானநிலையத்தில் திரு. பொன்னம்பலத்தை வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், விமான நிலையத்திலிருந்து அவர் ஊர்வலமாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படுவாரென்றும் அறியப்படுகிறது.

## 'மழைக்காக கொடும்பாவி'

சுழிபுரம், ஞாயிறு

சித்தங்கேணி, தொல்புரம் ஆகிய கிராமங்களில் மழை பெய்வதற்காக கொடும்பாவி கட்டி இழுக்கப்பட்டது. மேலும் கொடும்பாவி கட்டி இழுக்கும்முறையை மூளாய், சுழிபுரம், சங்கானை ஆகிய கிராமங்களிலும் நடத்த கொடும்பாவிக் கோஷ்டியினர் முடிவுசெய்துள்ளனர்.

---

புதுடில்லி, டிச், 20

தென்கொரியா வெளியுறவு மந்திரி இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார். அவர் இங்கு இரண்டு தினங்கள் தங்குவார்.

## ஐயாறன் எழுதுவது

மார்கழி திருவாதிரைக்கு சிதம்பரத்துக்குப் போகமுடியவில்லையே என்றுநேற்று இங்கு பலருக்கும் ஏமாற்றம். என். கியூ. டயஸ், ஸ்ரீமா எல்லாரையும் திட்டினர். ஸ்ரீமா அரசாங்கம் தோற்றதும், இனியாவது இந்தப் பிரயாணத்தடை நீங்குமா என்று ஆவலுடன் உள்ளனர்.

ஆனால் ஒரன்பர் இந்தத் தடை நீடூழி வாழ்க என்றார்! ஏனென்று கேட்டேன். இத்தடை இருப்பதால் தான் ஈழத்திலே பல பல கோவில்களிலும் திருவாதிரை விழா மிக உற்சாகத்துடன் விசேஷமாக நடப்பதாயும், சிதம்பரத்தை நினைத்துக்கொண்டு இங்கு சைவமக்களிடையே அதிகபக்தியும் ஆர்வமும் ஏற்பட்டிருப்பதாயும் சொன்னார். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே.

* * *

சிதம்பரம் சென்றிருந்தால் ஒரே ஒரு நடராஜரைத்தான் தரிசித்திருக்கமுடியும். ஆனால் நேற்றுகாலை யாழ்ப்பாணத்தில் நான்கு நடராஜாக்களின் ஆனந்தமான தரிசனம் எனக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்தது. வண்ணை சிவன் கோவில், நல்லூர் சிவன் கோவில், திருநெல்வேலி சிவன் கோவில், இத்துடன் மணிபாகவதரின் பஜனைகோஷ்டியின் குட்டி நடராஜரையும் கண்டேன். அதிகாலையிலே ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்குழந்தைகள் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை இவற்றையும் தேவாரங்களையும், மனப்பாடம் செய்து ஏககாலத்தில் சேர்ந்து இசையுடன் பாடிக் கொண்டே நல்லூரில் பல வீதிகளிலும் பஜனை செய்து கொண்டு சென்றகாட்சி, மனதைத்தொட்டது. ஒரு மாதத்துக்குள்ளாக பாகவதர் இவர்களுக்கு இவ்வித பயிற்சி அளித்தாராம்.

பலஇடங்களிலும் இம்முறை பஜனை கோஷ்டிகளும் அதில் கலந்துகொண்ட குழந்தைகளும் அதிகமாகும். இந்தப் பழக்கம் நேற்றுடன் முடிந்துவிடாமல் குழந்தைகள் இனி தினசரி அதிகாலை எழுந்திருக்கவும், தெய்வ வழிபாட்டில் ஈடுபடவும் இது உதவவேண்டும். அப்படிச் செய்தால் அக்குழந்தைகளின் வாழ்வு எல்லாவகைகளிலும் மேம்படக்கூடும்.

* * *

நேற்றுகாலையில் யாழ்ப்பாணத்திலே வானத்திலிருந்து சற்றே 'புஷ்பமாரி' பொழிந்தது. நான் முழுதும் மப்பும் மந்தாரமும். வருணன் எட்டிப் பார்க்கிறான். கீழே இறங்கி வரத் தயங்குகிறான். ஏன்? மழையில்லாமல் பயிர்களெல்லாம் வாடுகின்றன. அந்த நடராஜப்பெருமான் தான் கருணை காட்டவேண்டும்.

* * *

உலந்தார் தலைகலனொன்றேந்தி வானோர் உலகம் பலி திரிவாய் உனபாலன்பு, கலந்தார் மனங்கவருங் காதலானே கனலாடுங் கையவனே ஐயா மெய்யே, மலர்ந்தாங் குயிர்ப் பிறவி மாயக் காய மயக்குளே விழுந்த தமுந்தி நானும் நானும், அலந்தேன் அடியேனை அஞ்சேலென்னாய் ஆவடுதண்டுறையுறையும் அமரரேறே

—அப்பர் சுவாமிகள்

## உடுவில் தொகுதியில் திரு. சிவநேசன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுவில் தொகுதியில் ஈழம் முன்னணி போட்டியிடாதென்றும் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகரை ஆதரிக்குமென்றும் தெரியவருகிறது.

தமிழ்க்காங்கிரஸ் சார்பில் உடுவில் தொகுதியில் திரு சிவனேசன் போட்டியிடுவாரென்றும் தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

திரு. சிவநேசன் 1960-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டவர்.

# இந்திய பிரஜைகளை பதிவு செய்யும் வேலை இரு ஆண்டுகளில் முடியும்

## இலங்கையின் தற்போதைய சூழ்நிலை திருப்திகரமாகவிருக்கிறது

### சென்னையில் ஜா வெளியிட்ட தகவல்

சென்னை, டிச. 20

**இலங்கை இந்தியர் பிரச்னைசம்பந்தமாக சிறிமா-சாஸ்திரிக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது குறித்து இருநாட்டு அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுகள் நல்லசூழ்நிலையில், மொத்தத்தில் மிகவும் திருப்திகரமான முறையில் இருந்தது என்று இந்திய காமன்வெல்த் காரியதரிசி திரு. ஸி. எஸ். ஜா சென்னையில் நிருபர்களுக்களித்த ஒருபேட்டியில் கூறினர்.**

இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருப்பவர்கள், இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டு இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படவிருப்பவர்கள் ஆகிய இரு சாரார் சம்பந்தமாக ஒப்பந்தத்தின்படி இரண்டு இடாப்புகளைத் தயாரிக்க எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**நல்ல சூழ்நிலை**

"இலங்கையில் தற்பொழுது சூழ்நிலை திருப்திகரமாகவிருக்கிறது. சூழ்நிலை நல்ல நிலைமையில் மாறியிருப்பதால் ஒப்பந்தத்தை விரைவில் சுமுகமாக அமுல் நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது" என்றும் திரு ஜா தெரிவித்தார்.

**புதிய சட்டம் தேவையில்லை**

தற்பொழுது இலங்கையிலிருக்கும் இந்தியர்களை தாய்நாட்டுக்குத் திருமப அழைப்பதால் அவர்களுக்காக தனியாக புதிய சட்டம் இயற்ற வேண்டிய அவசியமில்லை. இவர்கள் இந்தியா திரும்பியதும் இந்தியப் பிரஜைகளாகவே கணிக்கப்படுவார்கள். அவர்களுக்கு பூரண உரிமைகளும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினர்.

**கூட்டுஸ்தாபனம்**

ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் பொருட்டு இலங்கை இந்திய அதிகாரிகளைக் கொண்ட ஒரு கூட்டுஸ்தாபனம் நிறுவப்படவிருக்கின்றது. இந்தக் கூட்டுஸ்தாபனம் இலங்கையில்தான் இருக்கும். ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் ஏற்படும் கஷ்டங்கள் குறித்து உடனுக்குடன் பேச்சுகள் நடத்தும்பொருட்டு இரண்டு காரியதரிசிகள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் காலத்துக்குக்காலம் கூடி, ஒப்பந்தத்தை சுமுகமாக அமுல் நடத்த துணைபுரிவார்கள்.

**இரு இடாப்புகள்**

இலங்கை பிரஜாவுரிமை பெறுபவர்களையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்களையும் தெரிவு செய்யும் வகையில் இரண்டு இடாப்புகள் தயாரிக்கப்படவிருக்கின்றன. இந்த இரண்டு இடாப்புகளும் விரைவாக முடிந்துவிடுமென்றே நம்புகின்றேன். அடுத்த இரண்டுவருட காலத்துக்குள் இந்தியப் பிரஜைகளாகப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளும் வேலைகள் முடிவடைந்துவிடும் என்றும் திரு ஜா நம்பிக்கை தெரிவித்தார்.

**அரசாங்கங்களின் பரிசீலனைக்கு**

இலங்கைப் பிரஜைகள், இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்கள் குறித்துத் தயாரிக்கப்படும் இரு இடாப்புகளும் இரண்டு அரசாங்கங்களின் சமூகத்துக்கும் சமர்ப்பிக்கப்படும். இரு அரசாங்கங்களும் இவற்றை காலத்துக்குக்காலம் பரிசீலனை செய்யும் என்றும் அவர் கூறினர்.

**ஒத்துழைப்பு வேண்டும்**

கொழும்பில் பேச்சுகள் நடைபெற்றபொழுது, நான் இந்தியத் தொழிலாளர்களின் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்தினேன். திரு தொண்டமான், திரு அஸீஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்த ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. ஜா வேண்டிக் கொண்டார்.

## இடாப்புகளைத் தயாரிக்க இரு நாடுகளும் இணக்கம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை பிரஜா உரிமை வழங்குவதற்கும் இந்தியப் பிரஜாஉரிமைவழங்குவதற்கும், ஒப்பந்தத்துக்குட்பட்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரவேண்டுமென்றும் இரு நாட்டுப் பிரஜைகள் குறித்து இரு இடாப்புகளும் தயாரிக்கவேண்டும் என்றும் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல் குறித்து கொழும்பில் பேச்சுக்கள் நடத்திய இலங்கை—இந்திய அதிகாரிகள் முடிவுசெய்துள்ளனர்.

இலங்கை—இந்தியர் பிரச்னை சம்பந்தமாக இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் புதுடில்லியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதற்கு சில நடைமுறைகளை நிர்ணயிப்பதற்காக கடந்த சில தினங்களாக கொழும்பில் நடைபெற்ற இலங்கை—இந்திய அதிகாரிகளின் பேச்சுக்களின் முடிவில் இலங்கை பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு எத்தகைய கூட்டு முறைகளை அமைப்பது என்பது குறித்து இரு தூதுக்குழுக்களும் சேர்ந்து முடிவுகள் செய்தன. ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய சில குறிப்பிட்ட நடைமுறைகள் சம்பந்தமாக இரு தூதுக் குழுக்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது இலங்கைப் பிரஜா உரிமைகோரி விண்ணப்பித்து இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்படுபவர்களின் ஜாபிதாவும், இந்திய பிரஜா உரிமைகோரி விண்ணப்பித்து இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுபவர்களின் ஜாபிதாவும், காலத்துக்குக்காலம் இரு அரசாங்கங்களுக்குமிடையே பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தோட்டங்களில் வேலை சிறிதளவும் பாதியாது"

### பிரதமர் சிறிமா உறுதி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதன் மூலம் தோட்டங்களில் வேலைகள் எதுவும் பாதிக்கப்படமாட்டாது என்று இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உறுதிமொழி அளித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் எழுதிய கடிதத்துக்கு அனுப்பிய பதிலில் தான் பிரதமர் மேற்கண்டவாறு உறுதி தெரிவித்தார்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துகையில், இலங்கை பொருளாதார அபிவிருத்திக்குப் பெரிதும் உதவிய இந்திய வம்சாவளியினருக்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தோட்டத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். தோட்டங்களில் வேலை பாதிக்கப்படாமல் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்றும் தலைவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

## மேலும் பேச்சுக்கள்

நியூயோர்க், டிச. 20

அமெரிக்க ராஜாங்கக் காரியதரிசி திரு. டீன் ரஸ்க்கும் சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு குரோமிக்கோவும் நேற்று இங்கு சுமார் மூன்று மணிநேரம் பேச்சுகள் நடத்தினர்.

கிழக்கு மேற்கு உறவுகள் குறித்தும் சர்வதேசப் பிரச்னைகள் பற்றியும் அவர்கள் பேச்சு நடத்தினர்.

## காங்கோ

லியபோல்ட்வில், டிச. 20

காங்கோவில் நிலைமை மீண்டும் மோசமாகியுள்ளது. அரசாங்க துருப்புகள் வசமிருந்த இரு நகரங்களை கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றியுள்ளனர்.

தற்பொழுது பெல்ஜியத்திலிருக்கும் திரு. ஷொம்பே, நேற்று பெல்ஜிய பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தினர்.

—

பம்பாய், டிச. 20

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மகாநாடு சீன கொள்கைகளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

தென் வியட்னாமில்

## உயர்தர தேசியசபை கலைக்கப்பட்டது

### இராணுவ தலைவர்கள் நடவடிக்கை: பலர் கைது

சைகோன், டிச. 20

தென்வியட்னாமில் உயர்தர தேசிய சபையை இராணுவத் தலைவர்கள் கலைத்துவிட்டனர். இச்சபையைச் சேர்ந்த சில தலைவர்கள் கைது செய்யப்பட்டு காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

தென்வியட்னாமில் நிலவும் நெருக்கடி இப்பொழுது அதிகரித்துள்ளதென்று செய்திகள் கூறுகின்றன.

பல அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், நிலைமை கட்டுக்கடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவிலியன் அரசாங்கத்துக்கு முழு ஆதரவு உண்டென்றும் பிரதமரையோ அல்லது மந்திரிகளையோ கைது செய்யும் நோக்கம் கிடையாது என்றும் இராணுவத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மனித முகத்துடன் ஆட்டுக்குட்டி

சீர்காழி, டிச. 20

சீர்காழிக்கருகில் உள்ள சோதியக்குடியில், நாராயணஸ்வாமி படையாச்சிக்குச் சொந்தமான ஆடு ஒன்று மூன்று குட்டிகளை ஈன்றது. இவற்றுள் ஒன்று; மனித முகத்துடன், தலைமயிரில்லாது பிறந்துள்ளது.

—

## 9 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

ஸ்ரீநகர், டிச. 20

காஷ்மீரில் அத்துமீறிப் பிரவேசித்த ஒன்பது பாகிஸ்தானியர்கள் இந்தியதுருப்புகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடதிசைநோக்கி நகர்ந்துள்ள இந்தியா

புதுடில்லி, டிச. 20

இந்தியாவானது தனது தொன்மையான இருக்கையிலிருந்து 2,000 மைல் தூரம் வடக்கே நகர்ந்துவிட்டது என்று பூகர்ப்ப விஞ்ஞானிகள் முடிவுசெய்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள சிலபாறைகள் தோன்றி 2500கோடி முதல் 300 கோடி வருடங்கள் வரை ஆகியிருக்கும் என்பது அவர்கள் செய்த மற்றொரு முடிவாகும்.

இந்தியா 2000 மைல்நகர்ந்துவிட்டது என்று பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் ஹிஜென் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 14-ம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச புவியியல் மகாநாட்டில் நடைபெற்ற விவாதங்களின் விளைவாக இந்த முடிவுகளை விஞ்ஞானிகள் செய்திருக்கின்றனர்.

—

## குழந்தைகள் கோஷமிட்டால்...

லாகோஸ், டிச. 20

மேற்கு நைஜீரியாவில் சில ஜில்லாக்களில் 16 வயதுக்குக் குறைந்த வயதுள்ளபிள்ளைகள் அரசியல் கோஷங்கள் முழக்கினால், அவர்களின் பெற்றோருக்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படுமென்று நைஜீரிய வானொலி அறிவித்துள்ளது.

இம்மாதம் 30-ம் திகதி பொதுத்தேர்தல் இங்கு நடைபெறுகிறது. அப்பொழுது அமைதியை உறுதிசெய்து கொள்ளும்பொருட்டு இச்சட்ட விதிகள் கொண்டுவரப்படுகின்றன. அரசியல் கட்சிகள், பாடசாலைகுழந்தைகளைக்கொண்டு அரசியல் கோஷங்களை முழக்கச்செய்வது வழக்கமாகிவிட்டதால் இதைத் தடுக்கும் பொருட்டே நைஜீரிய அரசாங்கம் இந்தப் புதிய விதிகளைக் கொண்டுவந்துள்ளது.

—

## அயூப். பேசுகையில் கூச்சல், கோஷம்

கராச்சி, டிச. 20

தேர்தல் குழு அங்கத்தவர்கள் கூட்டத்தில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் பேசிய போது, ஒரே கூச்சலாகவிருந்தது என்றும் கூட்டத்தினர் பலதடவை குறுக்கிட்டு கூச்சல் போட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## அமெரிக்காவில் குழந்தைகள் விற்பனை

நியூயோர்க், டிச. 20

சட்டபூர்வமான முறையில் குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு கைவிடப்படும் குழந்தைகளை விற்பனை செய்துவரும் கும்பல் ஒன்றை அமெரிக்காவில் நெவாடாவில் கண்டுபிடித்துள்ளனர். தத்து எடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் போல நடித்துப் பொலிஸ் ஏஜண்டுகள் இக்கும்பலை கைது செய்தனர்.

நெவாடா கும்பல், அமெரிக்கா பூராவிலும் இயங்கிவரும் குழந்தை விற்பனைக்கும்பலின் ஒரு பகுதியென்றும், இவ்வித விற்பனையில் சில சமயம், ஒரு குழந்தை 13,000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறதென்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குழந்தைகளில் பெரும்பாலானவை சட்டவிரோதமாக பிறந்தவையாகும், பணக்கஷ்டத்தால் வாடும் பெருந்த குடும்பங்களின் குழந்தைகளும் விற்கப்படுகின்றன.

—

## சீனாமீது கண்டனம்

டோக்கியோ, டிச. 20

கொழும்பு யோசனைகளை சீனா ஏற்காதகாரணத்தினால் பதட்டநிலைமை நீடித்துக்கொண்டு வருகிறது என்றும் சீன-இந்திய நெருக்கடிக்கு சீனாதான் காரணம் என்றும் டோக்கியோவிலிருந்து வெளியாகும் "ஜப்பான் டைம்ஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

"இந்தியா தனது பாதுகாப்பை அதிகரிப்பதில் சந்தேகப்படத்தேவையில்லை. இந்தியாவின் பாதுகாப்பு ஆயத்தங்கள் முற்றிலும் சரியே" என்றும் அந்தப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

—

ரோம், டிச. 20

இத்தாலிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் 7-வது தடவையும் உடன்பாடு ஏற்படவில்லை. ஏழுதடவைகள் முயன்றும் இதுவரை ஜனாதிபதி தெரிவுசெய்யப்படவில்லை. இத்தாலி பார்லிமெண்டில் ஜனாதிபதி தெரிவு நடைபெறுகிறது. ஜனாதிபதியாகும் எவரும் குறைந்தளவான 452 அதிகப்படியானவாக்குகள்பெறவேண்டும். ஆனால் எவரும் இதுவரை பெறவில்லை.

## வடமாகாண வாக்காளர் விபரம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு
பொதுத்தேர்தலில் வாக்களிக்கும் 4,709,053 வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இலங்கை முழுவதும் 4,647 வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும். 23 கச்சேரிகளில் நியமனப்பத்திரங்கள் ஜனவரி 11-ம் தேதி ஏற்றுக்கொள்ளப்படும்.

வடக்கு மாகாணத்திலுள்ள 13 தொகுதிகளில் உள்ள வாக்காளர் தொகை:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 28, 478 |
| உடுப்பிட்டி | 34, 275 |
| ஊர்காவற்றுறை | 8[illegible], 785 |
| வட்டுக்கோட்டை | 36,935 |
| காங்கேசன்துறை | 35, 309 |
| உடுவில் | 33, 280 |
| நல்லூர் | 3[illegible] 864 |
| கோப்பாய் | 38, 09[illegible] |
| சாவகச்சேரி | 30, 452 |
| கிளிநொச்சி | 8[illegible] 738 |
| பருத்தித்துறை | 2[illegible] 972 |
| மன்னார் | [illegible], 4[illegible] |
| வவுனியா | 24, 708 |

கிழக்கு மாகாணத்திலுள்ள தொகுதிகளில் உள்ள வாக்காளர் தொகை:

| | |
|---|---|
| திருக்கோணமலை | 27, 643 |
| மூதூர் (இரட்டைத் தொகுதி) | 38, 56[illegible] |
| கல்குடா | 24, 008 |
| மட்டக்களப்பு (இரட்டைத் தொகுதி) | 45, [illegible]87 |
| பட்டிருப்பு | 25, 855 |
| அம்பாறை | 32, 914 |
| கல்முனை | 22, 353 |
| நிந்தவூர் | 26, 497 |
| பொத்துவில் | 28, 586 |


**ராஜா சினிமா**
(சுழிபுரம்)
சிவாஜி, எஸ். எஸ். ஆர். பண்டரிபாய் நடித்த
**பராசக்தி**

REGAL — JAFFNA
NOW SHOWING
SIMONE SIGNORET
IN M. G. M'S
The Day And The Hour
(Cinemas cope)


## கூட்டுறவுசங்கங்களின் அவசியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
"இலங்கையின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு சிறந்த 500 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முறையாகச் செயல்படுமாயின் அதுவே போதுமானது. ஒரு கிராமத்துக்கு ஒரு பெரிய சங்கம் சிறந்த முறையில் இயங்கிவருமானால் அதுவே இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்தாக விருக்கும்" என்று கூட்டுறவு ஆணையாளர் திரு. எம். எஸ். வணசிங்கா அளவெட்டி கூட்டுறவுச் சங்கத்தில் பேசியபோது தெரிவித்தார். அளவெட்டி கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு வ. பொன்னம்பலம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

"விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட எமது நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு இரண்டுதுறையில் சங்கங்கள் இயங்குவது அவசியம். விவசாய உற்பத்திக்கு வேண்டிய வழிவகைகளை செய்வதோடு விவசாயிகளுடைய பொருட்களை விற்பனை செய்து கொடுப்பதற்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவி புரிய வேண்டும்" என்றும் திரு வணசிங்கா கூறினர்.

தலைவர் திரு வ. பொன்னம்பலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம் பற்றி தமது தலைமையுரையில் சொன்னார்.

## தாயகம் திரும்பினர்

புதுடில்லி, டிச. 20
ஐக்கிய நாடுகள் சபைக்கூட்டத்துக்குச் சென்றிருந்த திரு சுவர்ண்சிங் நேற்று தாயகம் திரும்பினர்.


**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன் 4 * 8
மனோகர் - பண்டரிபாய் நடித்த
**புனிதவதி**


ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சூரிய பூஜை

ஆலயங்கள் எந்த ஆகம முறைப்படி அமைக்கப்பட்டனவோ அந்த முறைப்படியே பூஜாவிதிகளும் அமைக்கப்படுகின்றன. ஆதலால் சில மாறுதல்களும் இருக்கலாம்.

அருதியான சமீத்தியா (சமாதி) லயங்களில் சூரிய வணக்கம் இல்லை. சைவர்கள் முழுமுதல்வனாகிய சிவபெருமான் ஒருவனையே வணங்குவதன்றி சூரியன் முதலிய மற்றோர் தெய்வம் உண்டென நினையார்.

ஆலயங்களில் அர்ச்சனவிதி முறையில் முதலில் சூரிய பூஜை என்று சொல்லுவதன்றி இன்னதின் முன்பின் என்பதில்லை. ஆசீர்வாதத்தில் புண்யாக, பஞ்ச கௌவியங்களுக்கு முன் சூரிய பூஜை என்பது சொல்லப்படுகின்றது. கால் சந்தியில் தான் சூரிய பூஜை இடம்பெறுகின்றன. கால் சந்தி சூரியனுதித்த பின் ஏழரை நாழிகைக்குட்பட இப்பூஜை நடைபெற வேண்டும். அப்பொழுது தான் சூரியபூஜை இடம் பெறும். சூரியன் உதயமாகும்போது சூரிய பூஜை செய்வது உத்தமமாகும். "அருணன், இந்திரன் திசை அணுகினன் இருள்போயகன்றது உதயம்" திருகேதீச்சரச் சிவாலயத்தில் நிகழும் சூரியபூஜை ஒப்புக்கொள்ளக் கூடியதாகும்.

சிவ. ஐயம்பிள்ளைக் குருக்கள்
(அநாதி சைவபரம்பரை)
கீரிமலை.

•

சூரிய பூஜை ஆரம்பித்துத் தான்மறுகாரியங்கள் கோவில்களில் நடாத்தப்பட்டுவருகின்றன 16-12-64 ஈழநாட்டில் சூரியபூஜை பற்றி அன்பர் த. சிவராமலிங்கம் எழுதிய கடிதத்தை வாசித்தேன். திருக்கேதீஸ்வரத்தில் சூரியபூஜையைப் பார்க்கமுடியவில்லையே யென வருந்தப்படுகிறார். சிவபூஜையில்கூட முதலில் சூரியபூஜையே இடம்பெறுகிறது. கும்பாபிஷேகம் சங்காபிஷேகம் போன்ற கிரியைகளுக்காகப் போடப்படும் யாகமண்டபத்தில் எல்லாவற்றுக்கும் முதலாகப் புண்யாஹம் அங்குரபூஜை ஆனதும் சூரியபூஜை செய்யப்பட்டுப் பின்னர் தான் மண்டபவாசல்களுக்கும் ஏனையவைகளுக்கும் பூஜை நடாத்தப்படுகிறது. இன்று இலங்கை இந்திய மக்களுக்கு ஓர் குருவாக விளங்கும் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்களிடமிருந்து இச்சந்தேகத்தைத் தெளிவாக்கியிருக்கலாம். திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் சூரிய பூஜை முதலான சகல பூஜைகளும் முற்றிலும் சரியானதே.

ச. கந்தையா
மாவிட்டபுரம்.

•

## தடுப்பு மருந்து

இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து கொடுப்பதற்காக கொட்டடி இளைஞர் சங்கவாசிகசாலைக்கு தாம் வருவதாக யாழ்ப்பாணம் மாநகர சபையால் நடத்தப்படும் இளம்பிள்ளை வாத தடுப்பு இயக்கத்தினர் எமக்கு அறிவித்து இதற்கான திகதியையும் தெரிவித்திருந்தனர். நாம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தோம். நமது வட்டார நகரசபை உறுப்பினரிடம் இது சம்பந்தமாக அறிவித்திருந்தோம். ஆனால் குறிப்பிட்ட திகதியில் மேற்படி இயக்கத்தின் பிரதான அதிகாரிகள் வரவில்லை. வராதது பற்றி எமக்கு முன்னறவித்தல்தானும் தரவுமில்லை. இதன் காரணமாக அன்று எமது வாசிகசாலையில் தடுப்புமருந்து பெறுவதற்காகக் காத்திருந்தவர் ஏமாற்றமுற்று வீடுதிரும்பினர். இதனால் எமது சங்கத்தாருக்கு மிக்க அவமரியாதையும் ஏற்பட்டுள்ளதாகவும் நாம் கருதுகின்றோம். பொறுப்புள்ளவர்கள் இவ்விதம் நடந்துகொண்டால் பொதுமக்கள் என்ன செய்வது?

ஆ. சி. குணரெத்தினம்,
கொட்டடி இளைஞர் சங்க காரியதரிசி.

•

## எந்தக்கட்சியுமில்லை

ஏழாலை கிராமசபைத் தேர்தலில் 14-ம் வட்டார அங்கத்தவனாகத் தெரிவுசெய்யப்பட்டயான் இலங்கையில் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து போட்டியிடவில்லை. ஈழநாடு பத்திரிகையில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்ததாக வெளிவந்துள்ள செய்தி சரியல்ல.

கு. கணேசலிங்கம்
குப்பிழான்

(தவறுநேர்ந்தமைக்காக வருந்துகிறோம்.—ஆ-ர்)

## நீதிபதியிடமே திருட்டு!

### மாணவனுக்கு நன்னடத்தைப் பிணை

உடுப்பிட்டி, ஞாயிறு
பருத்தித்துறை டிஸ்றிக் கோர்ட்டில் நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதரின் புதிய பாக்கர் 51 ஊற்றுப் பேனாவையும் டிஸ்றிக் கோர்ட்டு பியோன் என். முருகேசுவின் மூக்குக் கண்ணாடியும் திருடியதாக ஒரு மத்தியமகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் வி. நவரத்தினம் என்பவர் மீது பருத்தித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஹெபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி முதலாவது குற்றத்துக்கு இரண்டு வருடகன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதித்தார் இரண்டாவது குற்றத்துக்கு எச்சரித்து விடுதலை செய்தார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 21-12-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 வைநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12 00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் — எஸ. செல்வநாயகம், 7-15 பாட்டு — வி. சிவராசா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எங்கள்விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர்விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப பாடல்கள் திருப்பாவை — திருவெம்பாவை, 7-30 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பாட்டு — வி. சுந்தரம், 1-30 வாத்திய இசை, 1-50 கதம்ப இசை, 2-10 பாட்டு, 2-40 பொன்னெனார் பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 இசைப்பயிற்சி

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 8-00 பாட்டு — வி. சுந்தரம், 8-30 வெற்றி வாகை — சித்திரம், 8-45 மெல்லிசை, 9-15வீரபாரதம் — இசைச்சித்திரம், 9-30 பாட்டு— இசைச்சித்திரம், 9-30 பாட்டு— அனந்தலக்ஷ்மி சடகோபன.



## குத்துச்சண்டை வீரர்

பம்பலப்பிட்டி டெப்போ பொலிஸ் நிலையத்தில் கடந்த எட்டு வருடங்களாகக் கடமையாற்றிவரும் திரு கே. சிவசுப்பிரமணியம் பம்பலப்பிட்டி விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை குத்துச்சண்டைப் போட்டியில் இலங்கை நாவுனல் சாம்பியனாக வெற்றிபெற்றார்.

கொடிகாமத்தைச்சேர்ந்த திரு சிவசுப்பிரமணியம், அண்மையில் பம்பலப்பிட்டி ஸ்ரேடியத்தில் பாகிஸ்தான் குத்துச்சண்டைக் கோஷ்டிக்கும், இலங்கைக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியிலும் பங்குபற்றினர் 58-ம் ஆண்டு நடைபெற்ற மத்தியபிரிவு குத்துச்சண்டைப் போட்டியிலும், 59ம் ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் வெற்றிபெற்றார். 60-ம் ஆண்டு அரசாங்கசேவைப் போட்டியில் வெற்றியீட்டி, சிறந்த குத்துச்சண்டை வீரன் என்ற பட்டத்தையும் சுவீகரித்துக்கொண்டார். 60-ம் ஆண்டு ரோமில் நடந்த ஒலிம்பிக தெரிவுப் போட்டியில் பங்குபற்றி "பெஸ்ட் லூசர்" என்ற வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றார்.

## "கைத்தொழிலில் ஈடுபடவேண்டும்"

உடுப்பிட்டி, ஞாயிறு
புலோலி மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம் வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்றது. தலைமையாசிரியர் பண்டிதர் திரு. மு. செல்லையா சொற்பொழிவாற்றுகையில் இன்றைய வாலிபர்களின் வேலையில்லாப் பிரச்னை தீர வேண்டுமானால் அவர்கள் போதியளவு குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடவேண்டுமென்றும் அப்பணியில் வெற்றியீட்டுவதற்காகத் தாம் முன்னின்று பாடுபடத் தயாரென்றும் கூறினர்.

காரியாதிகாரி, ஆசிரியர் வ. சபாபதிப்பிள்ளை, திருவாளர்கள் வே. கதிரிப்பிள்ளை, மா. கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

## முத்திரையின் விலை ரூ. 10,933!.

நியூயோர்க், டிச 20
அமெரிக்க தபால் தலை ஒன்று, நியூயோர்க்கில் நடைபெற்ற ஏல விற்பனையில் மிக அதிக படசமாக ரூ. 10 933 விலைகொடுக்கப்பட்டது. இது 100 வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட முத்திரையாகும்.

## இந்திரா காந்தி

ரங்கூன், டிச 20
ரங்கூனுக்கு நேற்று விஜயம் செய்த இந்திய தகவல், ஒலிபரப்புமந்திரி திருமதி இந்திரா காந்தி இங்குள்ள இராமகிருஷ்ண மிஷன் ஆஸ்பத்திரியைச் சென்று பார்வையிட்டார்.


4-வது மகத்தான வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி, தெய்வத்தின் நிலை அடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
**பட்டினத்தார்**
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் [illegible]

கைப்பந்தாட்டம்

# தொல்புரம் மத்திய சனசமூக இளைஞர்கோஷ்டி வெற்றி

தொல்புரம், ஞாயிறு

தொல்புரம் மத்தியசனசமூக நிலையவாசிகசாலையைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டிக்கும், பொன்னாலை-நெல்லியான் இளைஞர் சங்கக்கோஷ்டிக்குமிடையே தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான கைப்பந்தாட்ட போட்டியில் தொல்புரம் மத்திய இளைஞர் கோஷ்டி மதத்தால் வெற்றியீட்டியது.

ஆரம்பம் முதல் இறுதிவரை வெகு விறுவிறுப்புடன் விளங்கிய இப்போட்டியை அதிகமானோர் கண்டுகளித்தனர். இக் கைப்பந்தாட்டப்போட்டி "அ" பிரிவு, "ஆ" பிரிவு என இரு பிரிவாக நடைபெற்றது. இரு பிரிவிலும் தொல்புரம் மத்திய சனசமூகநிலைய இளைஞர் வெகு துரிதமாக விளையாடி அமோக வெற்றிபெற்றனர்.

"அ" பிரிவு முடிவு வருமாறு:- முதலிரு ஆட்டங்களிலும் தொலபுரம் மத்திய சனசமூக நிலையக் கோஷ்டியினர் முறையே 14 : 9, 14 : 6 புள்ளிகளைப் பெற்றுஎதிர்க் கோஷ்டியை இலகுவில் தோற்கடித்தனர். தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்னுள் விளையாட்டுத் தலைவர் திரு சி. யோ. அரசரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

"ஆ" பிரிவு முடிவு வருமாறு: தொல்புரம் மத்திய சனசமூக நிலையக் கோஷ்டியினர் வெகு உற்சாகத்துடன் விளையாடி எதிர்க்கோஷ்டியினரை 15:11, 15 : 7 புள்ளிகளால் தோற்கடித்து அமோக வெற்றி பெற்றுள்ளனர். இப்பிரிவில் விளையாடிய திரு. சி. யோ. அரசரத்தினம் திறம்பட விளையாடி பாராட்டுதலைப் பெற்றுர். இப்போட்டிக்கு திரு யோ. சர்வானந்தம் நடுநிலைமை வகித்தார். முடிவில் சனசமூகநிலையத்தினர் இரு கோஷ்டிக்கும் விருந்துபசாரமளித்தனர்.

## குப்பிளான், ஏழாலை வெற்றி

குரும்பசிட்டி, ஞாயிறு

காங்கேசன்துறை ஜேயல் விளையாட்டுக் கழக முதற்பிரிவுக் கோஷ்டிக்கும், குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக முதற்பிரிவுக் கோஷ்டிக்குமிடையே குரும்பசிட்டி உதய தாரகை விளையாட்டுக் கழக ஆதரவில் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் குப்பிளான் கோஷ்டி 3–1 கோல்களால் வெற்றுபெற்றது. இப் போட்டிக்கு திரு. விநாயகரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக ஆதரவின் கீழ் ஈவினை பினையிங் டல்பிங் கோஷ்டிக்கும் ஏழாலை மத்திய சென்ட்ரல் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் ஏழாலை சென்ட்ரல் கோஷ்டி 3–2 கோல்களால் ஈவினைக் கோஷ்டியை வெற்றி பெற்றது.

ஏழாலைக் கோஷ்டியில் சார்பில் அன்ரன், ஜோசெப் ஆகியோர் இரு கோல்களையும் ஈவினைக் கோஷ்டி சார்பில் கருணைநாயகம் ஒரு கோலையும் அடித்தனர். திரு. ஜெயராஜசங்கம் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## வேலணைக் கிராமசபை வீட்டு வரி

வேலணை, திங்கள்

வேலணைக் கிராமத்தில் மின்சாரம், குடிநீர் விநியோகம் ஆகிய பல முன்னேற்றங்களைச் செய்யும்பொருட்டு 1965ம் ஆண்டு தேடக்கம் மேற்படி கிராமசபை எல்லையுள் வசிப்பவர்களிடமிருந்து வீட்டுவரி அறவிடப்படுமென்றும் ஆயுள்வேத

## முனியப்பர் கோவிலில் அன்னதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதியினரின் ஆதரவில் இன்று யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் கோவிலில் அன்னதானமும், திருவிழாவும் நடைபெறும்.

இன்று பகல் சுமார் பதினொரு மணியளவில் 300 பேருக்கு அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மாலையில் நாகராஜன் கோஷ்டியினரின் மேளக்கச்சேரியும், இரவு எட்டுமணி முதல் பத்துமணிவரை திரு. விஞசித்தம்பியின் கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

## புங்குடுதீவு கொலைவழக்கு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு வாசியும் தச்சுத் தொழிலாளியுமான வே. சின்னத்துரை என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியான செல்லையா சோமசுந்தரம் அல்லது சோமு என்பவர் அடித்துக் கொலை செய்ததாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தொடர்ந்த வழக்கு சுப்ரீம்கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப் பட்டிருப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

எதிரிதரப்பில் அட்வக்கேட் திரு கணேசலிங்கம் ஆஜராஞர்.

## "திருமண பதிவு கந்தோர் வேண்டும்"

மஸ்கேலிய, ஞாயிறு

அட்டன், தலாவாக்கொல்லை ஆகிய இடங்களில் உள்ள திருமண பதிவகங்களின் இடவசதிக் குறைவு காரணமாக திருமணப் பதிவுக்கு வரும் தோட்டத் தொழிலாளர்கள் மழையிலும், வெய்யிலிலும் கால்கடுக்க காத்திருக்கவேண்டியிருக்கின்றது.

இது சம்பந்தமாக இ.தொ. கழகத்தின் செயலாளர் மெ கவியப்பெருமாள், கண்டிமாவட்ட விவாக பதிவு அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் அட்டனிலுள்ள திருமணப் பதிவகம் மலையகத்தில் மிகவும் முக்கியமான பங்குகொண்டுள்ளது என்றும் மலையகத்திலேயே அதிக கூடுதலான திருமணப் பதிவுகளைப் பெறுவது அட்டன் காரியாலயமாக விருப்பதால் ராசா தோட்டத்தில் ஒரு பதிவகம் திறக்கப்பட்டால் மஸ்கேலியா, பொகந்தலாவ, சாமிமலை பகுதிகளிலுள்ள மக்கள் எத்தவித கஷ்டமுமின்றி திருமண பதிவுகளை நிறைவேற்றமுடியும் என்றும் எழுதியுள்ளார்.

"இப்பகுதிகளில் திருமணப் பதிவுகளுக்காக வருபவர்களில் 90 வீதமானோர் தமிழ் மக்களாக இருப்பதால் இவ்விரு இடங்களிலும் தமிழ் உத்தியோகத்தர்களை நியமிக்கும்படியும் இப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சிங்களபடிவங்களின்றி தமிழ் படிவங்களைக் கொடுத்துதவுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

## செய்திச் சுருக்கம்

ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்கி அதன்மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைச் சீர்படுத்தினுல்தான் தொழிலாளப் பெருமக்களுக்கு விமோசனம் உண்டென்றும் இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் சரித்திரத்திலே முதல் முதலாக நடைபெற்ற மூலேயா தோட்ட வேலைநிறுத்தத்தையும் அப்போது நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான கோவிந்தனின் தியாகத்தையும் யாரும் மறக்க முடியாதென்றும் நாவலப்பிட்டியில் நேற்றுமாலை நடைபெற்ற லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் 20-வது வருடாந்த மகாநாட்டில் பேசிய நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு. யூ. நவரத்தின கூறினுர்.

∴ ∴ ∴

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனங்களில் இலஞ்சமும் ஊழலும் மலிந்து வருகின்றன என்று களனியில் நடைபெற்ற கடை திறப்பு விழாவொன்றில் பேசிய மந்திரி திரு. ரி. பி இலங்கரத்ன தெரிவித்தார். "கம்யூனிஸ்ட்நாடுகளாகிய ரஷ்யா, சீனுபோன்ற இடங்களிலேயே இன்னுமே இலஞ்சஊழல் முற்றும் அகற்றப்படாமல் இருக்கும்போது நமது நாடு அதற்கு உட்பட்டிருப்பதில் வியப்பெதுவுமில்லையே" என்றும் அவர் சொன்னுர்.

∴ ∴ ∴

நிதிஅமைச்சர் டாக்டர் என் எம். பெரேராவை மேலும் ஒரு மாதத்துக்கு எந்த விதமான பொது வேலைகளிலும் ஈடுபடாமலிருக்கும்படி அவரைச் சத்திரசிகிச்சை செய்த டாக்டர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட விருப்பினும் எந்தவிதமான தேர்தல் பிரசார வேலைகளிலும் ஈடுபடமாட்டாரெனஅறியப்படுகிறது.

∴ ∴ ∴

பூர்த்தியாகாமல் இருக்கும் பாடசாலைகளின் திருத்தவேலைகள் யாவற்றையும் அடுத்த சில மாதங்களுக்குள் பூர்த்தியாகும்படி கல்விமந்திரி திரு பி. பீ. ஜி. கலுகல்லே பாடசாலை வேலைப்பகுதி என்ஜினியருக்கு உத்தரவிட்டுள்ளார்.

∴ ∴ ∴

அடுத்த வருடம் முதல் இலங்கையிடமிருந்து 2 கோடியே 70 லட்சம் ரூத்தல் தேயிலை வாங்குவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு திட்டமிட்டுள்ளது. 1961-ம் வருடத்தில் 85 லட்சம் ரூத்தல் தேயிலையும் 62-ல் 34 லட்சம் ரூத்தலும், 63-ம் வருடத்தில் 64 லட்சம் ரூத்தலும் இவ்வருட நவம்பர் மாதக் கடைசிவரை 1 கோடி ரூத்தலும் அது வாங்கியுள்ளது.

## வவனியாவில் கம்யூனிஸ்ட் அபேட்சகர்

வவனியா, ஞாயிறு

வவனியா தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு அபேட்சகரை நிறுத்தவேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப்பீடத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் வவனியாவில் இன்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைக் கூட்டத்தில் நிறைவேறியது. இக் கூட்டத்திற்கு திரு எஸ்.எம். யூசெப் தலைமைவகித்தார்.

மகாவலிகங்கையை சிரமதானமுறையில் வடக்கு மாகாணத்தற்கி திருப்பவேண்டும் என்றும் இச் சிரமதானத்தில் ஈடுபடுபவர்களுக்கு வவனியாவில் காணி கொடுக்கவேண்டுமென்ற தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேறியது.

இலவச வைத்தியசாலை, இலவச நூல்நிலையம், பொதுத் தெருக்கள், நடைபாதைகள், ஒழுங்கைகள், பொது மலசலகூடங்கள், சுடுகாடுகள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் திருத்தி அமைப்பதெனவும் வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. பு. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

# 'டைம்ஸ்' சஞ்சிகையை தடைசெய்ததேன்?

### பிரதமர் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

டிசம்பர் மாதம வெளியான டைம்ஸ் சஞ்சிகை இலங்கை அரசாங்கத்தினுல் தடைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புத்தபெருமானையும், பௌத்த மதத்தையும் இழிவாக்கும் கட்டுரைகள் அந்தச் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள காரணத்தினுல்தான் இது தடைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோபமூட்டக்கூடிய பௌத்த விரோதக் கட்டுரைகளையும், பௌத்த மதத்தைத் தூஷிக்கும் கட்டுரைகளையும் வெளியிட்டிருப்பதனுல்தான் இந்தச் சஞ்சிகை தடைசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் அலுவலகத்திலிருந்து வெளியான ஓர் அறிக்கையில் இதுபற்றிக் கூறப்பட்டிருப்பதாவது:-

"கற்பனைக்கும் எட்டாத பல கதைகளுடன், பௌத்த மதத்தையும் புனித புத்தபிரானையும் இழிவுபடுத்தும் நோக்கமாகப் பல கட்டுரைகள் வெளியாகியுள்ளன. டைம்ஸ் சஞ்சிகையில் வெளியான கட்டுரைகள் பௌத்த மதத்தையும், பௌத்த கலாசாரத்தையும் தூஷிப்பதாகவிருக்கின்றன. இந்தச் சஞ்சிகையை நாம் தடைசெய்ய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் பொதுமக்கள் இந்தச் சஞ்சிகையைத் தடைசெய்யக் கோருவர். இதன்விளைவாகவே இதைத் தடைசெய்ய நாம் முன்னெச்சரிக்கையை நடவடிக்கை எடுத்தோம்.

ஒருசில பத்திரிகைகளில் (ஈழநாடு அல்ல) தெரிவித்திருந்ததுபோல், அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் அந்தச் சஞ்சிகை ஈடுபட்ட காரணத்துக்காக நாம் இப்பத்திரிகையைத் தடைசெய்யவில்லை, பௌத்த மதத்தையும், பௌத்த கலாசாரத்தையும் இழிவுபடுத்தும்வகையில் சுமார் 5 பக்கங்களில் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. இதனைக் கண்டிக்கும் வகையிலேயே இப்பத்திரிகையைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இப்பத்திரிகை நாட்டில் விநியோகிக்கப் பட்டிருந்தால் மக்கள் ஆத்திரம் தாங்காமல் கொதித்து எழுந்திருப்பார்கள், அதனுடன் இந்தச் சஞ்சிகையைத் தடைசெய்யவேண்டுமென்றும் அவர்கள் கோரியிருப்பார்கள். இதன்காரணமாகவே இந்தச் சஞ்சிகையை உடன் தடைசெய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

"பௌத்த மதமும், அரசியலும்" என்ற தலைப்பில் இந்தச் சஞ்சிகையில் வெளியான கட்டுரை, குறிப்பாக இலங்கை மக்களைப் பாதித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை."

## பஸ்சேவை விஸ்தரிக்கப்படும்

வவுனியா, ஞாயிறு

ஓமந்தையில் உள்ள இளமருதங்குளம்-செம்மடு ரோட்டுக்குப் பஸ்சேவை விஸ்தரிக்கப்படவேண்டுமென்று வவுனியா மாவட்ட கிராமசபைத் தலைவர் திரு. இராசநாயகம், திருவாளர்கள் வல்லிபுரம், அண்ணாமலை ஆகியோரடங்கிய கோஷ்டியொன்று இ. போ. ச. மனேஜரைப் பேட்டி கண்டு தெரிவித்தார்கள்.

இக்கிராமத்தில் 3000 பேர் வசிக்கிறுர்களென்றும் அவர்கள் பிரயாணம்செய்ய மிகவும் கஷ்டப்படுகிறுர்களென்றும் தெரிவிக்கப்பட்டது. இதன் பயனுக ஜனவரி முதலாந்தேதி முதல் பஸ்சேவை விஸ்தரிக்கப்படும்.


### வரி விளம்பரம்

**விற்பனை**

கிறைண்டிங் மில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: அம்பாள் ஸ்ரோஸ், 168, அரசடி வீதி, கந்தர்மடம். 1345

**வாடகைக்கு**

மின்சார, தண்ணீர் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு, விபரங்களுக்கு: 7/3, இரண்டாம் கட்டை ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 3144

**நவீன முறையில்......**

வீடுகட்ட விரும்புபவர்களுக்கும், மற்றும் தேவைப்படுபவர்களுக்கும் சிறந்த முறையில் புதிய அமைப்பில் வீட்டுப் படங்கள் (Modern Housing Plan) வரைந்து கொடுக்கப்படும் தொடர்பு கொள்க. S. கமலநாதன், 18, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1348

**தமிழர் மகாதேசியமும்! செம்மனச்செல்வியும்!!**

மிக உத்தமநெறியில் அறுபது நாழிகையும் வாழ்ந்து, உயர்திணையின் உயர்வுகண்டிச் செல்வி, மிகச் சிறு கொடியில்-தானும் சிவசாம்பிராச்சிய இறைவனும் சந்திக்க அற்புதப் பேறுமூலம் 'தமிழர் மகாதேசியம்' இதுவென்று விளக்கினுர்! அமுலகப்பேறு!!

இச்சம்பவத்தில், தமிழ் ஒசைதந்த வேகத்தின் அனந்தகோடி விரிவைத் 'திருவெம்பாவைத்' தொடர்பான பிரசாரமூலம்' ஆங்காங்கு சிவாலயச்சபைகளின்முன் உலகம் உய்யவும்-இயற்கையும் - அறக்கடவுளும்-'வான்சிறப்பும்' கருணைதரும் வகைக்குச் சன்மார்க்க தவகூடம், ஒலிப்பதிவு உதவியுடன் தொண்டாற்றுகிறது!!? தொண்டுவிபரம் நூலாகும்.

வித்துவக் கலைஞன் ஆசி. சாந்தகுரு, கந்தரோடை, சன்மார்க்க தவகூடம். 1347


## வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் மழை பெய்திய ஆரம்பித்ததால், பெரும் வெள்ளம் வருமோ எனப் பலர் அச்சமடைந்தனர். கடந்த மாதமும் இடையிடையே மழை பொழிந்து, வயல்களில் எல்லாம் தண்ணீர் காணப்பட்டது ஆனுல் இம்மாதம் முற்றுகவே மழை பெய்யவில்லை.

இம்முறை புகையிலைச் செய்கையை குறைத்து அதே நிலத்தில் சிறு தானிய வகைகளை பயிர் செய்ய பலர் ஆலோசித்து வருகினுர்கள் எள்ளு, குரக்கன், சாமி, தினை போன்ற சிறு தானியங்களை பயிரிடுவதன் மூலம் ஓரளவு உணவுப் பஞ்சத்தை கிராமப்புறத்தில் கட்டுப்படுத்தலாம் எனக் கருதுகின்றனர்

வடபகுதியில் பல ஏழைக் குடும்பங்கள் விளைச்சலை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகின்றனர் பெரு வெள்ளம் காரணமாக பயிர்கள் அழிந்தபோது நஷ்டம் கொடுக்கும் அரசாங்கம் மழையின்றி விளைச்சல் கெட்டபோதும், நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என விவசாயிகள், காரியாதிகாரிகள் மூலம் அரசாங்கத்தை கோரவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# வண்ணத்திப்பூச்சிகளின் பிரயாண மோகம்!

பான், டிச 20

பறவைகளைப் போல் வண்ணத்திப் பூச்சிகளும் நாடுவிட்டு நாடு செல்லுகின்றன. பல்லாயிரக்கணக்கான மைல் தூரம் பறந்து சென்றுவிட்டு இந்தப் பூச்சிகள் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து விடுகின்றனவென்ற அதிசயமான உண்மையை மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஹியூபர் ரூயர் என்ற ஆராய்ச்சி நிபுணர் கண்டுபிடித்திருக்கிறார். இவர் வண்ணத்திப் பூச்சியைப் பிடித்து அதன் இறக்கைகளுக்கிடையில் கனமில்லாத மிகமெல்லிய வட்டவடிவ அலுமினியத் தகட்டைக் கட்டிவிடுகிறார். இந்தத் தகட்டில் அந்தப் பூச்சியைப் பிடித்த இடம், அது எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரங்கள் எழுதப்பட்டுள்ளன. சூரிய வெளிச்சத்தில் பிரகாசமாக மின்னும் வகையில் இந்தத் தகட்டில் வெள்ளி மூலாம் பூசப்பட்டிருக்கிறது. இந்தத் தகடு மின்னுவதைக் கண்டு அந்தப் பூச்சியைப் பிடிப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோளும் தகட்டில் எழுதப்பட்டுள்ளது. 'இந்தப் பூச்சியைப் பிடித்த இடத்தின் பெயரை தகட்டில் எழுதி, இப்பூச்சியைப் பானிலுள்ள விஞ்ஞானிக் பொருட்காட்சி சாலைக்கு அனுப்புங்கள்' என்று தகட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த அடையாளத் தகட்டுடன் ஆண்டுதோறும் 10,000 வண்ணத்திப் பூச்சிகளை டாக்டர் ரூயர் பறக்கவிடுகிறார். கடந்த 8 ஆண்டுகளில் 80,000 வண்ணத்திப் பூச்சிகளை இவர் அனுப்பியுள்ளார்.

இந்தப் பூச்சிகள் பெரும்பாலானவை பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடந்து பல வெளிநாடுகளுக்குச் சென்று சுற்றித்திரிந்துவிட்டுக் கடைசியில் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிவருகின்றன. அவற்றின் அடையாளத் தகட்டைப் பார்த்து அவை எந்தநாட்டுக்குச் சென்றன? எவ்வளவு மைல்கள் பிரயாணம் செய்தன என்பதை டாக்டர்ரூயர் அறிந்துகொள்கிறார். வண்ணத்திப்பூச்சிகள் கூட்டம் கூட்டமாகச்சேர்ந்து நெடுந்தூரம் பயணம்செல்லுகின்றன. அவை மிக வேகமாகப் பறக்கின்றன' ஒரு நாட்களில் 60 மைல் தூரம்கூடச் சென்றுவிடுகின்றன. குளிர்காலம், மழைக்காலத்தைவிட, கோடைகாலங்களில் வண்ணத்திப்பூச்சிகள் நெடுந்தூரம்செல்கின்றன,

## தலைமை ஆசிரியருக்கு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

எந்த ஒரு அறிஞனும் தனக்குத் தெரிந்த நல்லனவற்றையெல்லாம் பிறரும் அறிந்து கொள்ள வேண்டும், அவர்களும் பண்புள்ள மனிதர்களாக வாழ வேண்டும் என்பதையே விரும்புவான். இந்த நீதியும் கடந்த பதினேழு ஆண்டுகளாக ஆசிரியப்பணியாற்றி இளைஞர்களுக்கும் அதிபராகக் கடமையாற்றிய திரு. ஹென்றி இராசரத்தினத்தை இவ்வூர் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்று கொற்றுவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் கடந்த பதினேழு ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஹென்றி இராசரத்தினத்தின் சேவைநலன் பாராட்டுமுகமாக மேற்படி கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து நடாத்திய கூட்டத்தில் ஆசிரியை செல்வி இளையதம்பி ராஜேஸ்வரி பேசும்போது கூறினர்.

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நயினாதீவுவாசிகளான இராமன் செல்லையா, மாரிமுத்து கணபதி, மாரிமுத்து ஐயம்பிள்ளை ஆகிய மூவரும்சேர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு நாகமணியின் வீட்டுக்கு நெருப்பு வைத்ததாகக் குற்றம்சாட்டி தீவுப்பகுதிக் காரியாதிகாரியினால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. சி. ஜே. இராசரத்தினம் எதிரிகளை விடுதலை செய்தார்.

நீதிபதி எதிரிகளைப்பார்த்து நீங்கள் குறித்த குற்றத்தைச் செய்திருப்பீர்கள் என்று கோடு கருதினாலும் சந்தேகத்தைக் கொண்டு உங்களைக் குற்றவாளிகளாசுக்காணமுடியவில்லை எனக் குறிப்பிட்டார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் என். சி. சிவஞானமும், வழக்காளி சார்பில வழக்கறிஞர் திரு சி. கணேசலிங்கமும் ஆஜராகினர்.

## 4 மாதம் சிறை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனைவடக்கு வாசியான சவிரிமுத்து பேதுருப்பிள்ளை என்பவருக்கு அதே இடத்தில வசிக்கும் சி. கனகரத்தினம் அடித்துக்காயப்படுத்தி படுகாயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டி நீதிபதி சி கே. திரு இராசரத்தினம் எதிரிக்கு 4 மாதச்சிறைத்தண்டனை விதித்தார்.

## திருவெம்பாவை பஜனை

நீர்வேலி, ஞாயிறு

நீர்வேலி ஸ்ரீ விநாயக சனசமூகநிலைய இந்துசமய விருத்திச் சங்கத்தினரால் திருவெம்பாவையை முன்னிட்டுத் தினமும் பஜனைக்கோஷ்டி நிலையத்திலிருந்து ஆரம்பமாகி நீர்வேலி வாய்க்கால்தரவைப் பிள்ளையார் தேவஸ்தானத்தை வந்தடைந்து, அதன் பின் புராணபடனம் படிக்கப்பட்டது.

## சைவத் திருநெறி விழா

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டு - சிவன் இந்துசமய அபிவிருத்திச்சங்க ஆதரவில் வட்டுக்கோட்டை சிவன் கோவில் மேலை வீதியில் நடைபெற்றுவரும் சைவத்திருநெறி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் "புலவர் சேதுபேரன்" அரங்கில் இன்று நடைபெறுகின்றது. முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் விழாவுக்கு தலைமை வகிப்பார்.

உரையரங்கில் திரு. கே. பி ஹரன், திரு. கு. பாலசுந்தரக்குருக்கள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். பிரம்மஸ்ரீ இ பாலசுப்பிரமணியம் தலைமையில் "பரமன் வேண்டுவது பக்தியா, தொண்டா" என்னும் பொருள் குறித்து நடைபெறும் கருத்தரங்கில் திருவாளர்கள் மு சிவானந்தம், புலவர் நா. சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்து கருத்துரை நிகழ்த்துவர். சங்க ஆதரவில் நடைபெற்ற இயல், இசைப்போட்டிகளில் பரிசுபெற்றவர்களுக்கு வைத்தியாச்சாரியார் திரு. அ. க. குமாரசாமி பரிசில்கள் வழங்குவார்,

இசை, நடனம், நாட்டுக்கூத்து, நவீன கதாப்பிரசங்கம் ஆகியனவும் விழாவில் இடம்பெறும்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

அராலி, ஞாயிறு

அராலி வடக்கு கிராமமுன்னேற்ற சனசமூக நிலையங்களின் 16-வது ஆண்டு நிறைவு விழா சென்ற வியாழக்கிழமை மாலை சங்க மண்டபத்தில் தலைவர் திரு சி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றது

## வாய்க்கால்

உடுப்பிட்டி, ஞாயிறு

புலோலி மேற்கு கிராம சேவையாளரைத் தலைமையாகக்கொண்டு சமூக அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களும் சேர்ந்து சிரமதான இயக்க மூலம் 500 யார் நீளமான புதிய வெள்ள வாய்க்கால் ஒன்றைக் கட்டிமுடித்துள்ளனர்.

## காந்தி கோஷ்டி வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

தெல்புரம் கென்னடி கழகத்தினர் நடாத்தும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை காந்தி கோஷ்டியினரும் பொன்னாலை இளைஞர் கோஷ்டியினரும் கலந்துகொண்டனர். வட்டுக்கோட்டை காந்தி கோஷ்டி வெற்றிபெற்றது.

## திருவாதவூர் புராணம்

சுழிபுரம், ஞாயிறு

விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் திருவாதவூரர் புராணப் படிப்பு திருவெம்பாவை பத்துத் தினங்களிலும் அதிவிமரிசையாக நடைபெறுகிறது. இவ் வைபவத்தில் ஏராளமான பக்தர்கள் தினமும் கலந்துகொண்டனர்.

## சிறிமா...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கள், நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யும் இந்திய வம்சாவழியினர் தனி வாக்காளர் ஜாபிதாவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற யோசனையையும் கண்டித்து மகாநாட்டில் பலர்பேசினர்.

பொதுத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றியும் மகாநாடு ஆலோசனைசெய்தது.

## இரண்டு தட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அணைத்தனர். தீ அணைத்து முடிந்ததும் பஸ்ஸில் இருந்த தகரம் ஒன்று வெடித்தது. இதனால் பொலிசார் இருவருக்கும் காலில் சிறுகாயங்கள் ஏற்பட்டன பஸ்ஸிற்கு சேதமெதுவும் ஏற்படவில்லை.

பஸ் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு விசாரணை நடக்கிறது. தகரத்தில் என்ன இருந்ததென்பது பற்றி எதுவும் தெரியவில்லை. அரசாங்க பரிசோதகர் வந்து பரிசோதித்தபின்னரே அது தெரியவரும்.

## தமிழரசுக்கட்சி...-

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக இன்று தமிழரசுக்கட்சியின் காரியக்கமிட்டி கொழும்பில் கூடி ஆலோசனை நடத்தியது. இதுபற்றி இன்றைய கூட்டத்தில் தீர்க்கமான முடிவுஎதுவும் செய்யப்படவில்லை என்றும் ஆலோசனை நாளை காலையில் மீண்டும் ஆரம்பமாகும் எனவும் நாளை மாலையில் அபேட்சகர்கள் பற்றிய முடிவான பட்டியலை அறிக்கை மூலம் தெரிவிக்கப்படும் எனவும் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணப் பகுதியில் ஏற்பு மரணங்கள் அதிகரிப்பு!

## 15 தினங்களில் 12 மரணங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் 15 தினங்களில் 12 பேர்கள் ஏற்பினால் மரணமடைந்துள்ளார்களென்றும், பெற்றோர்கள் அதிக சிரத்தை எடுக்காத காரணத்தினால் தான் ஏற்பினால் ஏற்படும் மரணம் அதிகரித்துள்ளதாகவும் யாழ்ப்பாண நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் நேற்றுக காலை ஒரு முஸ்லிம் சிறுவன் சம்பந்தமாக, விசாரணை நடத்திய போது கூறினர்.

கலீமியா என்ற பதினொரு வயதுடைய முஸ்லிம் சிறுவன் ஏற்பினால் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த இரு வருடங்களாக இச்சிறுவனின் காதுக்குள்ளிருந்து சீழ் வடிந்ததாகவும் பெற்றோர்கள் வீட்டுவைத்தியத்தில் திருப்தியடைந்து வந்ததாகவும், சிறுவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற சமயம் நிலைமை மோசமாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# இலங்கையின் திறமையான துடுப்பாட்டம்

## ஜயசிங்கா, திஸ்ஸேரா தொடர்ந்து விளையாடுவர்

ஹைதராபாத், டிச. 20

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இலங்கை தன் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 167 ரன்கள் எடுத்தது. திஸ்ஸேரா 25 ரன்களும் ஸ்டான்லி ஜயசிங்கா 64 ரன்களும் எடுத்து அவுட் ஆகாமலிருக்கிறார்கள்.

இந்தியக் கோஷ்டி, முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 505 ரன்கள் எடுத்து தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டதாக அறிவித்தது. போர்டே 38 ரன்களும், ஹனுமந்சிங் 98 ரன்களும் எடுத்தனர்.

இன்றைய ஆட்டத்தில் இலங்கைக் கோஷ்டி திறமையுடன் விளையாடியது. இந்தியாவின் பிரபல பந்துவீச்சுக்காரர் சந்திரசேகரின் பந்துவீச்சு இன்று சோபிக்கவில்லை.

இலங்கை 57 ரன் எடுத்தபோது முதல் விக்கெட்டும், 80 ரன்களில் இரண்டாம் விக்கெட்டும், 106 ரன்களில் மூன்றும் விக்கெட்டும் வீழ்ந்தன.

# "சரவணைக் கிராமத்தில் மழைக்காகப் பிரார்த்தனை"

ஊர்காவற்றுறை, ஞாயிறு

காலமழை பெய்யாது நெல் வேளாண்மை, புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு 'மழை வேண்டும்' என்று சரவணைக் கிராமத்தில் வசிக்கும் வள்ளுவர்சேரி மக்கள் கடந்த சில தினங்களாக 'கொடும்பாவி' கட்டி அழுது பிரார்த்தனை செய்தனர்.

நேற்று முன்தினம் காலை திரு. நல்லான் தலைமையில் சனக்கூட்டத்துடன் 'கொடும்பாவி' பிரேதம் சரவணை குறுக்கு ரோட் வழியாகக் கொண்டு வரப்பட்டு சரவணை முச்சந்தியில் தகனம் செய்யப்பட்டது. இந்த வைபவத்தைப் பார்ப்பதற்கு ஆண்களும், பெண்களுமாகப் பலர் கூடியிருந்தனர்.

"அதர்மம் ஒழிக! தர்மம் தழைக்குக" என்ற கோஷத்துடன் இளைஞர் பலர் வீதிகள்தோறும் சென்று பறைமுழக்கம் செய்தனர். 'நல்ல மழை பெய்யாதோ' என மக்கள் பிரார்த்தனை செய்தனர். சிலர் அழுது புலம்பினர்.

கொடும்பாவிப் பிரார்த்தனையை அடுத்து இன்று சரவணை சின்னமடுச் சேரியுள்ள வைரவ கோவிலில் மழையை வேண்டி 'விசேஷ அபிஷேகம் நடைபெற்றது.

# 'தகுதியுள்ளவர்களை தேர்தலில் ஆதரிக்க வேண்டும்'

## மாவட்ட தொழிலாளர் சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட தொழிலாளர் சபையின் அவசரக் கூட்டம் திரு. விக்டர் நசெரூபிம் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன

(1) யாழ்ப்பாணத்தில் படித்த வாலிபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதால், யாழ்ப்பாணம் வாலிபர்கள் சிறந்த வேலை வாய்ப்புக்களுக்குப் போராட வேண்டுமென்றும் அரசியல்வாதிகள், சுயநலமிகள் ஆகியோரின் இனிப்பான வார்த்தைகளுக்குப் பலியாகக் கூடாதென்றும் கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) யாழ்ப்பாணத்திலும் நாட்டின் இதரபகுதிகளிலும் வேலையற்ற வாலிபர்களுக்கு அடிப்படைவேலை வசதிகளை அளிப்பதற்குப் போராடும் திறமையும், தகுதியும் உள்ள எந்த அபேட்சகரையும் ஆதரிப்பதென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) யாழ்ப்பாணம் இளைஞர்கள் ஐக்கியத்துடன் வேலை வாய்ப்பு வசதிகளுக்காகப் போராடும்படியும் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் திரு. மனுவேல்பிள்ளை ஜேம்ஸ் (கச்சமொட்டை) யினால் பிரேரிக்கப்பட்டு, திரு. என். ஆர். நெல்சனால் ஆமோதிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## 25 கோடி ரூபிள் ரஷ்யா கடன்

மாஸ்கோ, டிச. 20

ஐக்கிய அராபியக்குடியரசுக்கு 25 கோடியே 20 லட்சம் ரூபிள் கடன் வழங்கும் ஒப்பந்தத்தில் ரஷ்யா கையெழுத்திட்டது.

## புதிய கட்டட திறப்பு விழா

சுழிபுரம், ஞாயிறு

மாதகல் நுணசை முபலசேரக்கு சங்க புதிய கட்டடத்தை கூட்டுறவு ஆணையாளர் திரு. வனசிங்கா குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.